**ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I - 2021**

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 23 ஆம் திகதிய 8878-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது பிரதானமாக கூறு ஐ மற்றும் கூறு ஐஐ ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன் கூறு ஐ மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அமுல்ப்படுத்தப்படுகின்றது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆகும். அதில் ரூபா 8,030.46 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50.84 மில்லியன் செயற்திட்டத்தின் கூறு – ஐ (மத்திய மட்டம்) இற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் மொத்த கிரயம் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த செலவினங்களையும் அதன் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை<br>ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அறிக்கைகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூறு 1 இற்காக நிதியளிப்பு முகவராண்மையின் மொத்த பணவளிப்புக்கள் ரூபா 17,359 மில்லியன் ஆகும். அதில் திறைசேரியால் செயற்திட்டத்தின் கூறு 1 இற்காக ரூபா 7,962 மில்லியன் தொகை மாத்திரமே விடுவிக்கப்பட்டது. எனினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூறு 1 இற்காக திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூபா 7,785 மில்லியன் மாத்திரமேயானதுடன் ரூபா 177 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடந்த மூன்று ஆண்டுகளில், கூறு – 1 இற்காக செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 7,733 மில்லியன் ஆகும். திறைசேரியில் எஞ்சியிருந்த ரூபா 9,397 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 9,397 | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவாறு கூறு 1 இற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 7,785 மில்லியன் தொகை பெறப்பட்டதுடன் இது சரியானதாகும். மேலும் பெறப்பட்ட தொகைக்கும் விடுவிக்கப்பட்ட தொகைக்கும் இடையே வேறுபாடொன்று உள்ளது, விரிவான தகவல்கள் கண்டறியப்பட்டவுடன் தகவல் சமர்ப்பிக்கப்படும். | செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட அனைத்து நிதிகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 15,000 ரீஏ∴னுயேு சோதனைக் கருவிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 45.45 மில்லியன் மீண்டெழும் செலவினம் மற்றும் குறுகிய தொலைபேசி செய்தி சேவையைப் பெறுவதற்காக | 48.20 | 2022 நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்களைக் கண்டறிந்து, வகைப்படுத்தி, கணக்கீடு செய்வதற்கு முறையாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட ரூபா 540,000 வருடாந்த இணைப்புக் கட்டணம் என்பன நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 2.21 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பண பெறுவனவுகள், விலைப்பட்டியல்கள், கொடுப்பனவு விபரங்கள், கேள்வி ஆவணங்கள் மற்றும் பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள் போன்ற எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிக்காததால், ரூபா 63.67 மில்லியன் செலவினத்தை திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | 63.67 | இந்த 68 உறுதிச்சீட்டுக்கள் அரச மற்றும் பகுதியளவு-அரச நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுடன் தொடர்புபட்டதுடன் அந்த நிறுவனங்களிடம் இருந்து பெறுவனவுச் சிட்டைகள் கோரப்பட்டுள்ளதுடன் பெறுவனவுச் சிட்டை கிடைத்தவுடன் உடனடியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எழுத்துமூல சான்றாதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சப்ரகமுவ மாகாணத்தில் கட்டிட பராமரிப்பு, அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கொவிட்-19 தடுப்புக்காக செலவிடப்பட்ட ரூபா 4.65 மில்லியன் தொகை திறன் அபிவிருத்தி செலவினங்களில் பிழையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 4.65 | இந்தத் தொகையானது 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திறன் மேம்பாட்டுக் கூறுகளின் கீழ் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் இது 2022 நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பத்திரிகை நுழைவு மூலம் இது சரி செய்யப்படும். | செலவினங்களைக் கண்டறிந்து, வகைப்படுத்தி, கணக்கீடு செய்வதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **இல.** | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு** | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 20(1) மற்றும் 20(2) ஆம் பிரிவுகள். | முறையான வரி விலைப்பட்டியல் பெறப்படாமல் மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 1.5 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட கம்பனி மற்றும் தனிநபர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்த வரி அறிக்கைகளில் ரூபா 622,195 தொகை சரியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது, மேலும் மீதமுள்ள ரூபா 923,932 தொகை | சட்டத்தின் பிரகாரம் பெறுமதிசேர் வரி செலுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உறுதிப்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் முறையற்ற விலைப்பட்டியல்கள் மீது பெறுமதிசேர் வரி செலுத்துதல் தடுக்கப்படும். | |
| (ஆ) | 2020 மே 20 முதல் நடைமுறைக்கு வரும் 2021 இன் 09 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்த) சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | கொவிட் 19 தொற்றுநோயை சமாளிக்க தேவையான பொருட்களுக்கு பெறுமதிசேர் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த ஏற்பாடுகளிற்கு முரணாக 2020 மே 20 இன் பின்னர் 18 வழங்குநர்களுக்கு ரூபா 11 மில்லியன் பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் பெறுமதி சேர் வரி விலக்கு அளிக்கப்படுவதை அறியாமலேயே பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டுள்ளது, இது தொடர்பாக வழங்குநர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த பெறுமதிசேர் வரி வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வழங்குநர்கள் எதிர்காலத்தில் விசாரிக்கப்படுவார்கள். மேலும் அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. | பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் விசாரணையை நடாத்தி பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 237 (ஐ) (ஆ) | பொருள் பெறுவனவுக் குறிப்பு மற்றும் அவை தொடர்புடைய பொருளிருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதற்கான சான்றிதழ் என்பன கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 3.8 மில்லியன் கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்த 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் விடயத்தில் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது ஒரு கவனக்குறைவால் இடம்பெற்றுள்ளதுடன் எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01.ஃ.2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்டச் செயற்பாடுகள் குழுக் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேணடிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரே ஒரு கூட்டம் மாத்திரமே மெய்நிகர் தொழில்நுட்பம் மூலம் நடாத்தப்பட்டது. மேலும், இந்த கூட்டத்தில் செயற்திட்ட பணிப்பாளர் உட்பட 52 பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 08 பேர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். | சுகாதாரச் செயலாளர் மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் வழிகாட்டல் குழுக் கூட்டம் இடம்பெற்றதுடன், பௌதீகக் கூட்டத்தின் காரணமாக பல உறுப்பினர்கள் இணையத்தில் இணைவதை கட்டுப்படுத்தினர். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2017 யூன் 28 ஆம் திகதிய 01.ஃ.2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | மாகாண அலுவலகங்கள் மற்றும் செயற்திட்ட அலுவலகங்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயற்திட்ட அலுவலகத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரித்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 வழங்கல் இணைப்புக் குறிகாட்டிகள் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தில் 59 சதவீதம் மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. எனவே, செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வது கடினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் மருத்துவ விநியோக தகவல் முகாமைத்துவ முறைமை 350 ஆரம்ப பராமரிப்பு நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தப்படவிருந்தது, ஆனால் அந்த முறைமையில் உள்ள தொழில்நுட்ப சிக்கல்களால், 2021 சனவரியில், 62 நிறுவனங்களுக்கு மாத்திரமே இதனை விரிவாக்க முடிந்திருந்தது. அமைச்சின் திட்டமிடல் பிரிவின் ஊடாக பெறப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கு சுகாதார அமைச்சு ரூபா 1236.6 மில்லியன் தொகையை ஒதுக்கியிருந்த போதிலும் இறக்குமதித் துறை, நிர்மாணத் துறை மற்றும் டொலர் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக அவற்றை நடைமுறைப்படுத்த முடியவில்லை. | செயற்திட்டம் திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 முறைமை மற்றும் கட்டுப்பாடு**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்திட்டத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதத்திற்குப் பின்னர் 2022 ஆகஸ்ட் 09 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னதாக நீகிக்கூற்றுக்களை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் 36 சந்தர்ப்பங்களில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 41.8 மில்லியன் கொடுப்பனவுகள் தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானங்கள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைக் குழு தீர்மானங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைக் குழுவின் தீர்மானங்கள் அங்கிகாரத்தை பெற்ற பின்னர் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 473 மில்லியன் பெறுமதியான நடைமுறையல்லாத சொத்துக்கள் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் அந்த சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கூறு 1 (மத்திய மட்டம்) இற்கான முறையான செலவின விடயத்தின் கீழ் நிதியேற்பாடு செய்யப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும், ஊஜபுயுளு கணக்கீட்டு முறைமையின் ஆரம்ப மீதியாக அத் தொகையை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும் என்று அதே செலுத்தும் அலகுகளால் பொருளிருப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதியல்லாத சொத்துக்களை முறையாகக் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மத்திய மாகாணத்தில் உள்ள 47 மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களில் 66 நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஏற்பட்ட ரூபா 173 மில்லியன் தொகை இந்த செயற்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | குடிமக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவதற்காக, நாட்டின் சுகாதார முறைமை புற மட்டத்திலிருந்து (ிநசனிநசயட டநளநட) மத்திய மட்டம் வரையிலான சேவைகளின் வலையமைப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது, நிச்சயமாக, பல மேம்படுத்தப்பட்ட சிகிச்சைகள் மற்றும் வசதிகள் புற மட்டத்தில் காணப்படுவதில்லை, எனவே சுகாதார முறைமையில் உள்ள அனைத்து | செயற்திட்டம் திட்டமிட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மருத்துவமனைகளினதும் திறன்களை வலுப்படுத்துவது அவசியமானதுடன் தீவில் உள்ள 1000 இற்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில், உலக வங்கி நிதியுதவியை உறுதிப்படுத்துவதற்காக முடிவுகளை சரிபார்ப்பதற்காக 550 மருத்துவமனைகள் மாத்திரமே இனங்காணப்பட்டுள்ளன. | |
| (உ) | தொற்றாத நோய்களைக் கண்டறிந்து முகாமை செய்வதே இச் செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாக காணப்படுகின்ற போதிலும் வடமேல் மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 50 சதவீதமான ரூபா 168 மில்லியன் தொகை மாகாண சுகாதார நிறுவனங்களின் கட்டிட நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களில் சேர்க்கப்படாத 17 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக இந்த தொகையில் ரூபா 68.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | மாகாண சபைகள் ீளுளீ இடமிருந்து நிதியுதவியை பெறும் போது ஆரம்ப பராமரிப்பு சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகளை இனங்காணுகின்றது. எனவே, சரிபார்க்க முடியாத மருத்துவமனைகளில் இருந்து சில நடவடிக்கைகள் இனங்காணப்படும். | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். |
| (ஊ) | வடமேல் மாகாணத்தில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கும் குறித்த அலுவலகத்திற்கான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் செலவிடப்பட்ட முறையே ரூபா 31.2 மில்லியன் மற்றும் ரூபா 2.89 மில்லியன் தொகைகள் இந்த செயற்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் அதே நேரம் முறைமையின் சீரான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார நிர்வாக முறைமையை வலுப்படுத்துவது அவசியமாகும். | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். |
| (எ) | இச் செயற்திட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள உபகரணங்களைத் தவிர ஏனைய மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வடமேல் மாகாணத்தில் புத்தளம் மற்றும் குருநாகலவில் உள்ள பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் மூலம் ரூபா 93.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. | குடிமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட தரத்துடன் கூடிய சுகாதார சேவையை வழங்குவதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இச் செயற்திட்டத்தின் நிதிகள் பயன்படுத்தப்படலாம் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கடன் உடன்படிக்கையின் திருத்தப்பட்ட அட்டவணை 02 இன் பிரகாரம் பயிற்சி.∵. திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு பகுதி சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்களால் கூறு 11 இன் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அனைத்து 09 மாகாணங்களாலும் கூறு 1 இன் கீழ் பயிற்சி.∵. திறன் மேம்பாட்டிற்காக ரூபா 112.98 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டுள்ளது. கூறு ஐஐ இல் திறன் மேம்பாடு ஒரு செயற்பாடாக இனங்காணப்பட்டுள்ளது, கூறு ஐஐ இன் திறன்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இனங்கண்டு திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | இந்தக் கிரயம் கூறு II இன் கீழ் ஏற்கப்பட வேண்டும். |